Judicial Form No.53
( See Rule 42 )
**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III TIRUPATTUR**
Case No. **CC.NO. 2/2022**
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No. **4** Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. முத்துக்கிருஷ்ணன் | **தொழில்** | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| **த/க பெயர்** | திரு. மணி | **கிராமம்/ஊர்** | ஜோலார்பேட்டை |
| **வயது** | 48 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 16th day of June 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-**

1. நான் தற்போது ஜோலார்பேட்டை இருப்புப்பாதை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ஸ்ரீதர் அவர்கள் மற்றும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திருமதி. இளவரசி ஆகியோர் பணி மாறுதல் பெற்று சென்று விட்ட காரணத்தால் நான் கோப்புகளின் அடிப்படையில் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 13.12.2021 ஆம் தேதி 11.00 மணிக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ஸ்ரீதர் அவர்கள் நிலைய பொருப்பில் இருந்தபோது, அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, நிலைய குற்ற எண். 126/2021 இதச பிரிவு 379 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1–3 வரையிலான சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே காலை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரவணன் மற்றும் திருப்பதி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை முறையே என்னால் அ.சா.ஆ.9,10 ஆக குறியீடுசெய்யப்படுகிறது).** பின்னர், 13.12.2021 அன்று 12.15 மணிக்கு ஜோலார்பேட்டை இருப்பு பாதை நடை மேடை எண். 1 வடக்கு பகுதியில் இருந்த ஒரு நபரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை செய்ய அவர் முண்ணுக்கு பின் முரணாக அளித்த தகவலின் அடிப்படையில், சாட்சிகள் திரு. திருப்பதி மற்றும் திரு. சரவணன் ஆகியோர்

முன்னிலையில் எதிரி சபீர் (கூகா) தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சபீர் (கூகா) இவ்வழக்கில் ஈடுபட்டது தெரியவந்தது. **( எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி என்னால் அ.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர், எதிரியை அன்றைய தினம் காலை 14.15 மணிக்கு காரணம் கூறி கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி தானாக எடுத்து ஆஜர் செய்த ரூபாய் 500/- ஐ கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார் **(அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் - 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(அந்த படிவம் - 91 அ.சா ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர், கைது செய்யப்பட்ட எதிரியை உரிய திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திருமதி. இளவரசி அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். பின்னர் வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்து கொண்ட காவல் ஆய்வாளர் சாட்சிகளை விசாரித்து, பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 379 இதச ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, இவ்வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்திலேயே வைத்து, தயாரித்து, எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை -</u>** இல்லை

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>Signature of Witness          Judicial Magistrate No.III(FAC)<br>Tirupathur. |